# அடையாளம்

இலங்கை கம்மியூனிஸ்ட் கட்சியில் மத்திய குழு அங்கத்தவராக ஒருகாலத்தில் இருந்த பேராசிரியர் சிவத்தம்பி தமிழ் அடையாளத்தை பேணவேண்டும் என (4.7.04) தினகுரலில் எழுதி இருந்தார். இலங்கை தமிழ் இனத்திற்கே பீஸ்மர் போல் இருக்கும் இவர் போன்ற கல்விமான் கூறுவதில் உண்மை இருக்கும்.

இந்த அடையாளம் காலம்காலமாக என்னை குழப்பிய விடயம். மேடைகள் பலவற்றில் குறிப்பாக, கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் இருந்து தமிழன் உலகில இருந்து வருகிறான் என இலங்கையில் மட்டுமல்ல தமிழகத்திலும் பலர் முழங்க கேட்டிருக்கிறேன். மரம், செடி கொடி எல்லாவற்றிற்கும் முன்பு தமிழன் இருந்திருக்கிறான். நல்லவிடயம்தான்.

இலங்கையில் மட்டும் பார்ப்போம். இத்தகைய தமிழர்கள் எல்லாரையும் சமமாகப் பார்க்கிறார்களா? இலங்கையில் மலையகத்தமிழரும், இஸ்லாமியத் தமிழரும் தென்னிலங்கையில் சிங்களவர் மத்தியில் தமிழை துணிந்து பேசுவார்கள். எழுதுவார்கள். ஏன் உரத்து வீரகேசரியையும் தினகரனையும் வாசிப்பார்கள் மலையகத்தமிழரும் இஸ்லாமியத் தமிழரும்தான். இதேவேளையில் யாழ்ப்பாணத்தில் இருந்து தென்னிலங்கைக்கு போகும் தமிழர்கள் ஆங்கிலம் பத்திரிகையை வாங்கிப்படிப்பார்கள். ஆங்கிலத்தில் பேசுவார்கள். ஒரு மாறுவேடப் போட்டியில் கலந்துகொள்ள வந்திருப்பவர்கள் போல் தென்இலங்கையில் நடந்து கொள்வார்கள். பிழைப்புக்காக நடந்துகொண்டோம். நானும் உட்பட, தவறவில்லை. பிரச்சினை எங்குவருகிறதென்றால் இப்படி வேடமிட்ட தமிழர்கள் உண்மையான தமிழ் பேசி, படித்து வரும் இந்த இஸ்லாமிய தமிழர்களை அல்லது மலையகத்து தமிழர்களிலும் விட தாங்கள் தமிழ் அடையாளத்தில் பிறந்தவர்கள் என சொல்ல முற்படும்போது தான்.

விமர்சனங்களுக்கு அப்பால் 'தமிழ் பேசும் மக்கள்'' என்ற பதத்தை பிரயோகித்து யாவரையும் அரவணைக்க முயன்றவர் தமிழ் அரசு கட்சித் தலைவர் செல்வநாயகம் அவர்கள். இப்பதத்தால் மலையகத்தமிழர், இஸ்லாமியர், இந்துக்கள் மற்றும் கிறிஸ்துவர்கள் ஒன்றிணைந்தார்கள்.

கிழக்கு மாகாணத்தில் அக்காலத்தில் திருவாளர்கள் இராஜவரோதயம், இராசமாணிக்கம், இராசதுரை, அப்துல் மஜித் மசூர் மௌலான போன்ற தலைவர்கள் தோன்றினார்கள். இந்த அரவணைப்பு, தலைவர் பதவி திரு அமிர்தலிங்கம் அவர்களிடம் சென்றதும் மாறிவிட்டது. மட்டக்களப்பு எம்பியாகவிருந்த இராசதுரைக்கு எதிராக அரசியலில் அப்போதும் அனுபவம் பெறாத காசியானந்தனை புகுத்தியதால் மட்டக்களப்பில் மனக்கசப்பு ஏற்பட்டது. காசியானந்தன் தோற்றது மட்டும் அல்ல, தமிழர் கூட்டணிக்கு அமிர்தலிங்கத்திற்கோ விசுவாசமாக இருக்கவில்லை. இது பழைய வரலாறு.

சமீபத்தில் இப்படியான பிரதேச உணர்வுகளை அவதானமாக கையாண்ட ஒருவர் இ.பி.ஆர்.எல்.எவ் சேர்ந்த பத்மநாபாவாகும்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கு பின்பு ஐந்து அமைச்சர்களை மாநில அரசாங்கத்துக்கு தெரிந்தபோது முன்னாள் முதல்வர் வரதராஜா பெருமாளுடன் மட்டக்களப்பில் இருந்து கிருபாகரனை நிதிக்கு பொறுப்பாக்கி இஸ்லாமிய தமிழரையும் சிங்களவர் ஒருவருடன் ENDLF க்கு மற்றய அமைச்சரையும் கொடுத்தார்.

இந்த அரசாங்கம் குறைமாதத்தில் போனதற்கு பல காரணங்கள் உண்டு. அதை நான் ஆராயவில்லை. பிரதேச உணர்வுகளை மதித்து தலைவர் செல்வநாயகத்துக்கு பின் செயற்பட்ட ஒருவர் பத்தநாபா என்பது எனது கணிப்பு. தற்போது கருணாவால் ஏற்பட்ட பிளவு புலிகளுக்கு ராணுவரீதியில் பெரிய விடயமாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் இலங்கையில் தமிழ் அடையாளம் என பேராசிரியர் சிவத்தம்பி போன்றவர்களால் பேசுபவரும் ஒன்றிற்கு கிடைத்த மரண அடியாகும். ஆங்கிலத்தில் Last Nail on the coffin எனலாம். '

பல ஆணிகள் முன்பு அடிக்கப்பட்டுள்ளது.
மலையகத்தமிழர்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட்ட போது திருவாளர் ஜி.ஜி. பொன்னம்பலம் செயல்பட்டவிதம்.

இஸ்லாமிய மக்களை யாழ்ப்பாணத்தில் இருந்து அகற்றியதோடு கிழக்கில் நடந்த கொலை செயல்கள் இப்படி பல சம்பவங்கள் தமிழ் அடையாளம் என சொல்லும் போது யாழ்ப்பாண அடையாளம் என குறுக்கப்பட்டுவிட்டது.

கடைசியாக ஏகப்பிரதிநிதித்துவம் என்ற சொல்வடிவம் வந்தபின்பு இந்த தமிழ் அடையாளமே வேண்டாம் என சொல்லும் அளவுக்கு பலர் தள்ளப்பட்டுள்ளார்கள்.